06-03-2022 காலை முரளி ஓம் சாந்தி "அவ்யக்த பாப்தாதா" ரிவைஸ் 22.02.1990

விளையாட்டு முழுவதின் ஆதாரம் - ஒளி மற்றும் புள்ளி (விசேஷமாக சிவஜெயந்தியை முன்னிட்டு)

இன்று திரிமூர்த்தி சிவபாபா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியின் மீதும் மூன்று திலகங் களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகள் அனைவரும் மனதின் ஊக்கம்-உற்சாகத் தின் மூலம் திரிமூர்த்தி சிவஜெயந்தி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார்கள். திரிமூர்த்தி சிவ தந்தை என்றால் ஜோதிர்பிந்து. தந்தை குழந்தைகளின் நெற்றியின் மீது மூன்று பிந்தி களின் திலகத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். இந்தத் திலகம் ஞானம் முழுவதின் சாரமாகும். இந்த மூன்று பிந்திகளில் முழு ஞானக்கடலின் சாரம் நிறைந்துள்ளது. முழு ஞானத்தின் சாரம் மூன்று விஷயங்களில் உள்ளது - பரமாத்மா, ஆத்மா மற்றும் டிராமா, அதாவது படைப்பு. இன்றைய நினைவு நாளும் கூட சிவன், அதாவது பிந்துவினுடையது. தந்தையும் பிந்து, நீங்களும் பிந்து மற்றும் படைப்பு, அதாவது டிராமாவும் பிந்து. ஆக, பிந்து வாகிய நீங்கள் அனைவரும் பிந்துவின் ஜோதியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். பிந்து ஆகிக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? முழு இயற்கையின் விளையாட்டும் கூட இரண்டு விஷயங்களினுடையது தான் - ஒன்று பிந்துவினுடையது, இன்னொன்று ஒளி, ஜோதியினுடையது. பாபாவை வெறுமனே பிந்து என்றல்ல, ஆனால் ஜோதிர் பிந்து எனச் சொல்கின்றனர். படைப்பவரும் ஜோதிர் பிந்து மற்றும் நீங்களும் ஹீரோ பார்ட்தாரி ஜோதிர் பிந்து, வெறும் பிந்து இல்லை. மேலும் முழு விளையாட்டையும் பாருங்கள் - எந்த ஒரு காரியம் செய்தாலும் அதற்கு ஆதாரம் ஒளி. இன்று உலகத்தில் லைட் ஃபெயிலாகி விட்டால் ஒரு விநாடியில் உலகம் உலகமாக இருக்காது. சுகத்திற்கான சாதனங்கள் என்னென்ன உள்ளனவோ, அவற்றின் ஆதாரம் எது? ஒளி. படைப்பவர் சுயம் ஒளியாக உள்ளார். ஆனால் இயற்கையின் ஒளி அழியாததல்ல. ஆக, விளையாட்டு முழுவதும் பிந்து மற்றும் ஒளியின் மீது தான். இன்றைய நினைவு நாளை விசேஷமாக நிராகார் ரூபத்தில் கொண்டாடுகின்றனர். ஆனால் நீங்கள் எப்படிக் கொண்டாடுவீர்கள்? விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் கொண்டாடு வதும் கூட விசேஷமானது தான் இல்லையா? இப்படி எப்போதாவது நினைத்துப் பார்த்திருப் போமா - நாம் ஆத்மாக்கள் இந்த மாதிரி பத்மாபதம் பாக்கியவான்கள் - நேரடியாக திரிமூர்த்தி சிவ தந்தையுடன் சாகார ரூபத்தில் ஜெயந்தி கொண்டாடுவோம் என்று? ஒரு போதும் கனவில் கூட சங்கல்பம் இருந்ததில்லை. உலக மனிதர்கள் ஞாபகார்த்த சித்திரங்கள் மூலம் ஜெயந்தி கொண்டாடு கின்றனர் மற்றும் நீங்கள் சைதன்யத்தில் தந்தையை அவதரிக்கச் செய்து ஜெயந்தி கொண்டாடுகிறீர்கள். ஆக, சக்திசாலி யார்? பாபாவா, நீங்களா? பாபா சொல்கிறார், முதலில் நீங்கள். குழந்தைகளே இல்லை என்றால் பாபா வந்து என்ன செய்வார்? அதனால் முதலில் பாபா குழந்தைகளுக்கு வாழ்த்து சொல்கிறார், உளப்பூர்வமான வாழ்த்து. பாபாவை மனதில் பிரத்தியட்சம் செய்து விட்டிருக்கிறீர்கள் என்றால் மனதில் பாபாவைப் பிரத்தியட்சம் செய்வதற் காக வாழ்த்துகள். அதோடு கூடவே உலகின் அனைத்து ஆத்மாக்களுக்காகவும் இரக்க மனம், விஷ்வ

கல்யாணகாரியின் சுப பாவனை, சுப விருப்பத்தின் மூலம் உலகின் முன் பாபாவைப் பிரத்தியட்சம் செய்வதற்கான சேவையின் ஊக்கம்-உற்சாகத்திற்காக வாழ்த்துகள்.

பாப்தாதா குழந்தைகள் அனைவரின் உற்சாகத்தின் உற்சவத்தைப் பார்த்துக் கொண்டி ருந்தார். சேவை செய்வது என்றால் உற்சாகத்துடன் உற்சவத்தைக் கொண்டாடுவது. எவ்வளவு பெரிய எல்லையற்ற சேவை செய்கிறீர்களோ, அவ்வளவு எல்லையற்ற உற்சவத்தைக் கொண்டாடு கிறீர்கள். சேவையின் அர்த்தமே என்ன? சேவையை ஏன் செய்கிறீர்கள்? ஆத்மாக்களுக்குள் பாபாவின் அறிமுகத்தின் மூலம் உற்சாகத்தை அதிகரிப் பதற்காக. சேவைக்கான திட்டங்களை உருவாக்கும் போது இதே உற்சாகம் இருக்கிறது இல்லையா? - சீக்கிரம்- சீக்கிரமாக வஞ்சிக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கச் செய்ய வேண்டும். ஆத்மாக்களுக்குக் குஷியின் ஜொலிப்பினுடைய அனுபவம் செய்விக்க வேண்டும். இப்போது நீங்கள் எந்த ஓர் ஆத்மாவைப் பார்த்தாலும் - அவர் இன்றைய உலகத்தில் எவ்வளவு தான் பெரியவராக இருந்தாலும் ஒவ்வோர் ஆத்மாவையும் பார்த்த உடனே முதலில் என்ன சங்கல்பம் எழுகிறது? இவர் பிரதம மந்திரி, இவர் ராஜா - இது தென்படுகிறதா அல்லது ஆத்மா வோடு சந்திக்கிறீர்கள் அல்லது பார்க்கிறீர்களா? சுப பாவனை எழுகிறது இல்லையா - இந்த ஆத்மாவும் கூட பாபாவிடமிருந்து பிராப்தியின் துளியைப் பெறட்டும். இந்த சங்கல்பத்தோடு சந்திக்கிறீர்கள் இல்லையா? இந்த சுப பாவனை எழும் போது தான் உங்களது சுப பாவனையின் பலன் அந்த ஆத்மாவுக்கு அனுபவம் செய்வதற்கான பலம் கிடைக்கிறது. சுப பாவனை உங்களுடையது, ஆனால் உங்கள் பாவனையின் பலன் அவருக்குக் கிடைத்து விடுகிறது. ஏனென்றால் சிரேஷ்ட ஆத்மாவாகிய உங்கள் சுப பாவனையின் சங்கல்பத்தில் அதிக சக்தி உள்ளது. உங்களில் ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாவின் ஒவ்வொரு சுப சங்கல்பமும் வாயு மண்டலத்தின் சிருஷ்டியைப் படைப்பதாகும். சங்கல்பத்தின் மூலம் சிருஷ்டி எனச் சொல் கின்றனர் இல்லையா? இந்த சுப பாவனையின் சுப சங்கல்பம் நாலாபுறமும் உள்ள சூழ்நிலையை, அதாவது சிருஷ்டியை மாற்றி விடுகிறது. எனவே வரக்கூடிய ஆத்மாவுக்கு நல்லதிலும் மிக நல்ல அனுபவங்கள் அனைத்தும் ஏற்படுகின்றன. உலகிலிருந்து விலகிய நிலையை அனுபவம் செய்கின்றனர். கொஞ்ச சமயத்திற்காக உங்கள் சுப சங்கல்பத்தின் பாவனையின் விளைவாக - இது விலகிய மற்றும் அன்பான இருப்பிடம், விலகிய மற்றும் அன்பான ஃபரிஸ்தா ஆத்மாக்கள் இவர்கள் என்று அவர்கள் புரிந்து கொள்கின்றனர். எப்படிப் பட்ட ஆத்மாவாக இருந்தாலும் சரி, கொஞ்ச சமயத்திற்கு உற்சாகத்தில் வந்து விடுகின்றனர். சேவையின் அர்த்தம் என்ன? உற்சவத்தைக் கொண்டாடு வது. அதாவது உற்சாகத்தில் கொண்டு வருவது. எந்த ஒரு ஸ்தூல காரியம் செய்தாலும் சரி, வாய்மொழி மூலமாகவோ, சங்கல்பத்தின் மூலமாகவோ, ஒவ்வொரு வார்த்தையும் உற்சவம் தான். ஏனென்றால் உற்சாகத்துடன் செய்கிறீர்கள் மற்றும் உற்சாகத்தைக் கொடுக்கிறீர்கள். இந்த ஸ்மிருதியினால் ஒரு போதும் களைப்பு ஏற்படாது. சுமையாகத் தோன்றாது. தலை பாரமாகாது. மனச்சோர்வடைய மாட்டீர்கள். யாருக்காவது களைப்பு ஏற்படுகிறது அல்லது மனம் சோம்பலாகிறது என்றால் உலகத்தில் என்ன செய்கிறார்கள்? ஏதாவது பொழுதுபோக்கிற்கான இருப்பிடம் சென்று விடுகின்றனர். இன்று தலை மிகவும் பாரமாகி விட்டது, எனவே கொஞ்சம் மனமகிழ்ச்சி தேவை எனச் சொல்

கின்றனர். உற்சவம் என்பதன் அர்த்தமே மகிழ்ச்சியைக் கொண்டாடுவது என்பது தான். உண்ணுங்கள், அருந்துங்கள், மகிழ்ந்திருங்கள் -- இது தான் உற்சவம். பிராமணர்களுக்கோ ஒவ்வொரு நொடியும் உற்சவம். ஒவ்வொரு கர்மமும் உற்சவம். உற்சவம் கொண்டாடுவதில் களைப்பு வருமா என்ன? இங்கே மதுபனில் மனமகிழ்ச்சிக்கான பொழுதுபோக்கு நிகழ்ச்சி களை நடத்துகிறீர்கள் என்றால் மணி 11 ஆனாலும் அமர்ந்திருக்கிறீர்கள். வகுப்பில் 11 மணி அடித்தாலோ பாதி வகுப்பு சென்று விடுகிறது. மனமகிழ்ச்சிக்கான பொழுதுபோக்கு நன்றாக இருக்கிறது இல்லையா? ஆக, சேவையும் கூட உற்சவம் தான் -- இந்த விதி மூலம் சேவை செய்யுங்கள். தானும் உற்சாகத்தில் இருங்கள், சேவையையும் உற்சாகத்துடன் செய்யுங்கள் மற்றும் ஆத்மாக்களிடமும் உற்சாகத்தைக் கொண்டு வருவீர்களானால் என்ன வாகும்? என்ன சேவை செய்கிறீர்களோ, அதன் மூலம் மற்ற ஆத்மாக்களுக்கும் உற்சாகம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். அந்த மாதிரி உற்சாகம் உள்ளதா? அல்லது மதுபன் வரை மட்டும் உள்ளதா? அங்கே போன பிறகு சூழ்நிலை காணப்படுமா? உற்சாகம் என்பது அப்படிப்பட்ட ஒரு பொருள், அதன் முன்னால் பரிஸ்திதி (பாதகமான சூழ்நிலை) ஒன்றுமே இல்லை. எப்போது உற்சாகம் குறைந்து விடுகிறதோ, அப்போது பரிஸ்திதி எதிர்த்துப் போராடுகிறது. உற்சாகம் இருந்தால் பரிஸ்திதி போராடுவதில்லை. உங்கள் மீது பலியாகி விடும்.

இன்று உற்சவம் கொண்டாட வந்திருக்கிறீர்கள் இல்லையா? சிவஜெயந்தியை உற்சவம் எனச் சொல்கின்றனர். உற்சவம் கொண்டாட வரவில்லை, ஆனால் ஒவ்வொரு நொடியும் உற்சவம். இதை அடிக்கோடிடுவதற்காக வந்திருக்கிறீர்கள். சக்தி கூட இல்லாமல் இருக் கலாம், சரீரத்தில் சக்தி இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், அல்லது செல்வத்தின் சக்தி குறைவாக இருக்கிற காரணத்தால் மனதில் ஃபீலாகிறது - இது நடக்க முடியாது. ஆனால் உற்சாகம் என்பது அத்தகைய ஒரு பொருள் - உங்களிடம் உற்சாகம் இருக்கு மானால் அடுத்தவரும் கூட உற்சாகத்தில் முன்னேறிச் சென்று உங்கள் சகயோகி ஆகி விடுவார். செல்வத்தின் குறைவு இருந்தாலும் எங்கிருந்தாவது செல்வத்தை உற்சாகம் இழுத்து வந்து விடும். உற்சாகம் அப்படிப் பட்ட காந்தம் - அது செல்வத்தையும் கூட ஈர்த்து வந்து விடும். எப்படி பக்தியில் சொல்கிறார் கள் இல்லையா - தைரியம், உற்சாகம் தூசியைக் கூட செல்வமாக மாற்றி விடும். அந்த அளவு மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. உற்சாகம் அப்படிப்பட்ட ஓர் அனுபவம் - அதனால் எந்த ஓர் ஆத்மாவின் பலவீனமான சம்ஸ்காரமும் பிரபாவத்தை ஏற்படுத்தாது. உங்கள் பிரபாவம் அவர் மீது படும், அவரது பிரபாவம் உங்கள் மீது வராது. எது நினைவிலோ கனவிலோ கூட இருந்திருக்காதோ, அது சுலபமாக நனவாகி விடும். இது அனைத்து சேவாதாரிகளுக்கும் பாப்தாதாவின் கேரண்டியின் (உத்தரவாதமான) வரதானமாகும். புரிந்ததா?

பாப்தாதா குஷியாக உள்ளார். நல்ல ஈடுபாட்டுடன் சேவையின் சமநிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். சம்ஸ்காரங்களின் நல்லிணக்கம், அதாவது சம்பூர்ண நிலையை அருகில் கொண்டுவர வேண்டும் மற்றும் சமயத்தை அருகில் கொண்டுவர வேண்டும். பாப்தாதாவும் பார்த்துக் கொண்டிருக்கிறார் - சம்ஸ்கார நல்லிணக்கத்தின் ராஸ் (நடனம்) நன்றாகச் செய்து கொண்டிருந்தனர். நல்ல மணம் வந்து கொண்டிருந்தது. அப்போது சதா எப்படி இருக்க வேண்டும்?

உற்சவம் கொண்டாட வேண்டும், உற்சாகத்தில் இருக்க வேண்டும். தான் எதுவும் செய்ய இயலாது போனாலும் மற்றவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுப்பீர்களானால் மற்றவர் களின் உற்சாகம் உங்களையும் கூட உற்சாகத் தில் கொண்டு வரும். நிமித்தமாகியுள்ள மூத்தவர்கள் இந்தக் காரியத்தைத் தான் செய்கிறார்கள் இல்லையா? மற்றவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுப்பது என்றால் தன்னை உற்சாகத்தில் கொண்டு வருவதாகும். ஒரு வேளை 14 அணா உற்சாகம் இருக்குமானால் மற்றவர்களுக்கு 16 அணா உற்சாகம் கொடுப்பீர் களானால் உங்களுக்கும் 2 அணா உற்சாகம் அதிகரித்து விடும். பிரம்மா பாபாவின் விசேஷ குணம் என்னவாக இருந்தது? நிலக்கரி மூட்டை தூக்குவதாக இருந்தாலும் உற்சாகத்துடன் தூக்குவார். மனமகிழ்ச்சி அடையச் செய்வார். (நிலக்கரியின் 35 வேகன்கள் வருவதாக இருந்தது. பாப்தாதா முரளியில் நிலக்கரி பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார் மற்றும் கொஞ்ச சமயத்திற்குப் பின் தகவல் கிடைத்தது - அபு ரோட்டில் நிலக்கரி வேகன்கள் வந்து சேர்ந்து விட்டதாக) நல்லது!

பாண்டவர்கள் அனைவரும் என்ன செய்வீர்கள்? சதா உற்சாகத்தில் இருப்பீர்கள் இல்லையா? உற்சாகத்தை ஒரு போதும் விடக்கூடாது. இப்போதைய உற்சாகம் உங்களின் ஜடச்சித்திரங் களின் முன்னால் சென்று முதலில் உற்சாகம் தைரியம் பெற்று அதன் பிறகு காரியத்தைத் தொடங்குகின்றனர். அவ்வளவு உற்சாகம் நிறைந்த ஆத்மாக்கள் நீங்கள் -- உங்களின் ஜடச்சித்திரங்கள் கூட மற்றவர்களுக்கு தைரியம் உற்சாகம் கொடுத்துக் கொண்டி ருக்கின்றன. பாண்டவர்களின் மகாவீர் சித்திரம் எவ்வளவு பிரசித்தம்! பலவீனமானவர்கள் சக்தி பெறுவதற் காக மகாவீரர்களிடம் செல்கின்றனர். நல்லது.

நாலாபுறமுள்ள அதிசிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகள் அனைவருக்கும், சதா ஜோதிர் பிந்து ஆகி, ஜோதிர்பிந்து தந்தையைப் பிரத்தியட்சம் செய்வதற்கான ஊக்கம்-உற்சாகத்தில் இருக்கக் கூடிய, சதா இதயத்தில் பாபாவின் பிரத்தியட்சதாவின் கொடியைப் பறக்க விடக் கூடிய, சதா உலகத்தில் பாபாவின் பிரத்தியட்சதாவின் கொடியைப் பறக்கவிடக் கூடிய - அத்தகைய வைரத் திற்கு சமமான தந்தையின் ஜெயந்தி மற்றும் குழந்தைகளின் ஜெயந்திக் கான வாழ்த்துகள். சதா வாழ்த்துகளால் பறப்பவர்கள் மற்றும் சதா அவ்வாறே இருப்பார்கள் - அத்தகைய உற்சாகத்தில் இருக்கக் கூடிய, ஒவ்வொரு நேரமும் உற்சவம் கொண்டாடக் கூடிய மற்றும் அனைவர்க்கும் உற்சாகம் கொடுக்கக் கூடிய, மகான் சக்திசாலி ஆத்மாக் களுக்கு திரிமூர்த்தி சிவதந்தையின் அன்பு நினைவுகள், வாழ்த்துகள் மற்றும் நமஸ்தே!

இரட்டை வெளிநாட்டினர் சகோதர-சகோதரிகளுடன் சந்திப்பு - தந்தை மற்றும் குழந்தைகளுக் கிடையில் அந்த அளவு இதயபூர்வமான சூட்சும தொடர்பு உள்ளது -- அதனைப் பிரிப்பதற்கு யாருக்கும் சக்தி கிடையாது. அனைத்திலும் பெரியதிலும் பெரிய நஷா குழந்தைகளுக்கு சதா இது தான் உள்ளது - உலகம் பாபாவை நினைவு செய்கிறது, ஆனால் பாபா யாரை நினைவு செய்கிறார்? பாபாவையோ பிறகும் ஆத்மாக்கள் நினைவு செய்கிறார்கள். ஆனால் ஆத்மாக்கள் உங்களை யார் நினைவு செய்கிறார்? எவ்வளவு பெரிய நஷா! இந்த நஷா சதா இருக்கிறதா? கூடக்குறைய இருப்பதில்லையே? சில நேரம் பறப்பதும் சில நேரம் ஏறுவதும், சில நேரம் நடப்பதுமாக அந்த மாதிரி இல்லையே?

பின்தங்கி விடு பவர்கள் இல்லை, நின்று விடுபவர்களும் இல்லை, ஆனால் வேகம் மாறி விடுகிறது. பாப்தாதா சதா குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். சில நேரம் நடக்கத் தொடங்குகின்றனர், பிறகு என்னவாகிறது? ஏதாவது அந்த மாதிரி சூழ்நிலை அமைந்து விடுகிறது, பிறகு யாராவது தள்ளி விடுகின்றனர் என்றால் நடக்கத் தொடங்கு கின்றனர். அது போல் ஏதாவதொரு விஷயம் டிராமாவின் அனுசாரம் நடந்து விடுகிறது. அதனால் மீண்டும் பறக்கும் கலையின் பக்கம் கொண்டு செல்கிறது. ஏனென்றால் டிராமா அனுசாரம் பக்கா நிச்சயபுத்தி உள்ளது, மனதில் சங்கல்பம் செய்தாயிற்று-- பாபா என்னுடையவர், நான் பாபாவுடையவன் என்றால் அத்தகைய ஆத்மாக் களுக்குத் தானாகவே உதவி கிடைத்து விடுகிறது. உதவி கிடைப்பதற்கு எவ்வளவு சமயம் பிடிக்கிறது? (ஒரு விநாடி) பாருங்கள், புகைப்படம் வெளியாகிக் கொண்டிருக்கிறது. பாபாவின் கேமரா ஒரு விநாடியில் அனைத்தையும் வெளிப்படுத்தி விடும். எது நடந்தாலும் சரி, பாபா மற்றும் சேவையிலிருந்து ஒரு போதும் விலகிவிடக் கூடாது. நினைவு செய்வதிலும் படிப்பைப் படிப்பதிலும் மனம் ஈடுபடாமல் போனாலும் விடாப்பிடியாகக் கேட்டுக் கொண்டே இருங்கள், யோகா செய்து கொண்டே இருங்கள், சரியாகி விடும். ஏனென்றால் மாயா சோதித்துப் பார்க் கிறது. இவர் கொஞ்சம் விலகி விட்டால் இவரிடம் நான் சென்று விடுவேன் என மாயா நினைக் கிறது. அதனால் ஒரு போதும் விலகி விடக் கூடாது. நியமங்களை ஒரு போதும் விட்டுவிடக் கூடாது. தனது படிப்பு, அமிர்தவேளை, சேவை என்னென்ன தினச்சரியா உருவாக்கி வைத்திருக் கிறீர்களோ, அதில் மனம் ஈடுபடா விட்டாலும் பரவாயில்லை, ஆனால் அதில் எதையும் தவறவிடக் கூடாது. பாருங்கள், உங்கள் பக்தர்கள் இது வரையிலும் கூட உங்கள் நியமங்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். கோயிலில் மனம் ஈடுபடா விட்டாலும் கூட அங்கே அவசியம் போவார்கள். இதை யாரிடம் கற்றார்கள்? நீங்கள் தாம் அவர்களுக்குக் கற்றுத் தந்தீர்கள் இல்லையா? சதா இதை அனுபவம் செய்யுங்கள் - மரியாதைகள், நியமங்கள் (சட்ட திட்டங்கள்) என்னென்ன உருவாக்கப்பட்டுள்ளனவோ, அவற்றை உருவாக்குபவர் நாம் தான். நீங்கள் உருவாக்கினீர்களா அல்லது உருவாக்கப்பட்டது கிடைத்துள்ளதா? சட்டத்தை உருவாக்கு பவர் நீங்கள் என்பது நினைவில்லையா? அமிர்த வேளை எழ வேண்டும் என்பதை உங்கள் மனம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா அல்லது உருவாக்கப் பட்டுள்ளது, அதனால் அதன் படி நடக்கிறீர்களா? நீங்கள் சுயம் அனுபவம் செய்து கொண்டு செல்கிறீர்களா அல்லது வழிகாட்டுதல் அல்லது நியமம் உருவாக்கப் பட்டுள்ளது, அதனால் அதன் படி நடக்கிறீர்களா? உங்கள் மனம் ஏற்றுக் கொண்டுள்ளது இல்லையா? ஆக, எதை மனம் ஏற்றுக் கொண்டுள்ளதோ, அது மனதில் உருவாக்கப் படவில்லை இல்லையா? எந்த ஒரு நிர்பந்தத்திற்காகவும் சென்று கொண்டிருக்க வில்லை. செய்து தான் ஆக வேண்டும் - அப்படி இல்லை தானே? அனைத்தும் மனதுக்குப் பிடித்தமானது தான் இல்லையா? ஏனென்றால் எது குஷியோடு செய்யப் படுகிறதோ, அதில் பந்தனம் இருப்பதாகத் தோன்றாது. இங்கே பாபா முதல்-இடை-கடை மூன்று காலங்களின் ஞானத்தையும் கொடுத்து விட்டார். நீங்கள் எதைச் செய்தாலும் மூன்று காலங்களையும் அறிந்து கொண்டு மற்றும் அதே குஷியோடு செய் கிறீர்கள். பாபா பார்க்கிறார் - அற்புதம் செய்யக்கூடிய குழந்தைகள்! பாபாவிடம் அன்பு அளவற்றது. அதனால் எந்த ஒரு பிரச்சினை என்றாலும் கூட பறந்து கொண்டே இருக் கின்றனர். பாபாவிடம் அன்பு என்ற விஷயத்தில் அனைவரும்

முழுமையாகப் பாஸாகி விட்டீர்கள். படிப்பில் நம்பர்வார் இருக்கிறீர்கள். ஆனால் அன்பில் நம்பர் ஒன். சேவையும் நன்கு செய்கிறீர்கள். ஆனால் அவ்வப்போது கொஞ்சம் விளையாட்டைக் காட்டுகிறீர்கள். எப்படி பாபாவிடம் நம்பர் ஒன் அன்பு உள்ளதோ, அது போல் முரளி மீது அன்பு உள்ளதா? எப்போது வந்தீர்களோ, அப்போதிலிருந்து எத்தனை முரளிகளைத் தவற விட்டிருப்பீர்கள்? யாரேனும் எப்போதாவது சும்மா சாக்குப்போக்கு சொல்லி முரளி வகுப்பைத் தவற விட்டிருக்கிறீர்களா? எப்படி பாபாவை நினைவு செய்வதைத் தவற விடக் கூடாதோ, அது போல் படிப்பைத் தவற விடக்கூடாது. இதிலும் நம்பர் ஒன்னாக இருக்க வேண்டும். தந்தை ரூபத்தில் நினைவு, ஆசிரியர் ரூபத்தில் படிப்பு மற்றும் சத்குரு ரூபத்தில் கிடைத்துள்ள வரதானங்களைக் காரியத்தில் ஈடுபடுத்துவது - இதைத் தான் வரதானங்களால் நன்மை யடைவது எனச் சொல்வது. ஆக, இந்த மூன்று விஷயங்களையுமே சோதித்துப் பார்க்க வேண்டும் - ஆரம்பத்திலிருந்து இது வரை இந்த மூன்று விஷயங்களிலும் எவ்வளவு பாஸா கியிருக்கிறோம்? அப்போது தான் வெற்றி மாலையில் மணியாக வருவீர்கள். நல்லது.

பாப்தாதா குழந்தைகளின் நிச்சயம் மற்றும் ஊக்கத்தைப் பார்த்துக் குஷியடைகிறார். பாப்தாதா ஒவ்வொருவரின் விசேஷ குணங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா பார்க்கிறார் - எவ்வளவு அன்போடு முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றனர், முயற்சியை முயற்சியாகப் புரிந்து கொள்வதில்லை, அன்பினால் சென்று கொண்டிருக் கின்றனர் - அதனால் குஷியடை கிறார். ஒவ்வொருவரின் விசேஷ குணங்களின் பட்டியல் பாப்தாதாவிடம் உள்ளது. புரிந்ததா? நல்லது.

விடைபெறும் சமயம் - இன்று பாப்தாதா மற்றும் அநேகக் குழந்தைகளின் பிறந்த நாளுக்கான பல மடங்கு வாழ்த்துகள்! நாலாபுறமும் உள்ள குழந்தைகளின் பிறந்த நாளுக்கான பல மடங்கு வாழ்த்துகள்! நாலாபுறமுள்ள குழந்தைகளின் இதயபூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் கூடவே ஸ்தூல ஞாபகார்த்த அன்பு நிறைந்த கடிதங்கள் மற்றும் வாழ்த்துக் கார்டுகள் பெற்றோம். அனைவருடைய மனதின் குரல் பாபாவிடம் வந்து சேர்ந்தது. திலாராம் பாபா பெரிய மனம் படைத்த அனைத்துக் குழந்தைகளுக்கும் பெரிய மனதோடு மிக-மிக-மிக அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். பல மடங்கு என்று சொல்வதும் கூட குழந்தைகளின் சுவமானத் திற்கு முன்னால் எதுவுமே இல்லை. அதனால் வைர இரவுக்காக வைரங்களின் மழையால் வாழ்த்துகள். அனைவருக்கும் அன்பு நினைவு மற்றும் சதா ஃபரிஸ்தா ஆகிப் பறந்து கொண்டே இருப்பதற்கான வாழ்த்துகள். நல்லது. வைர விடியல்.

வரதானம் : தீமையின் காட்சியிலும் கூட நன்மையை அனுபவம் செய்து சதா ஆடாது, அசையாது இருக்கக் கூடிய நிச்சயபுத்தி உள்ளவர் ஆகுக.

டிராமாவில் எது நடந்தாலும் அது கல்யாண்காரி யுகத்தின் காரணத்தால் அனைத்தும் நன்மை செய்பவை தாம். தீமையிலும் நன்மை காணப்பட வேண்டும், அப்போது நிச்சயபுத்தி உள்ளவர் எனச் சொல்வார்கள். பரிஸ்திதியின் சமயத்தில் தான் நிச்சயத்தின் ஸ்திதியைக் கண்டறிய முடியும். நிச்சயம் என்பதன் அர்த்தம் - சந்தேகத்தின் பெயர்-அடையாளம் இருக்கக் கூடாது. எது நடந்தாலும் சரி, நிச்சயபுத்தி உள்ளவரை எந்த ஒரு பரிஸ்திதியும் குழப்பத்தில்

கொண்டுவர முடியாது. குழப்பத்தில் வருவது என்றால் பலவீனமாவதாகும்.

சுலோகன்: பரமாத்ம அன்பிற்குப் பாத்திரமானவர் ஆவீர்களானால் சகஜமாகவே மாயாஜீத் ஆகி விடுவீர்கள்.